வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : **30/2024**

எனது இல : **NP/07/10/01/178**
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
2024.11.01

செயலாளர் - மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்
ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வடக்கு மாகாணம்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்/ மன்னார்/ வவுனியா/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு.

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தரம் III பதவிக்கு சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024**

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் NP/17/cad/04/23ம் இலக்க 2024.06.13 ம் திகதிய கடிதமூலமான சிபார்சுக்கமையவும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் G/NPC/A10/approval/2024 இலக்க 2024.08.05ம் திகதிய அனுமதிக்கமையவும், யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அவர்களது EL/J/PE/2024/27ம் இலக்க 2024.10.20ம் திகதிய ஒப்புதலுக்கு அமைவாகவும் வடக்கு மாகாண பொதுச்சேவையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தரம் III பதவிக்கு சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளையுடைய வடக்கு மாகாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கு 2024.01.31ம் திகதியில் உள்ளவாறான வெற்றிடங்களின் எண்ணிக்கை **03 (மூன்று)** ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2024.11.25** ஆகும்.

**02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :-**

2.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைவான சேவை நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

2.2 இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும். வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் அத்தியாயம் VIII இல் விதித்துரைக்கப்பட்டமைக்கு அமைய, நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமை தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

2.3 இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

2.4 மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கும்போது, தங்களது விண்ணப்பப் படிவங்களை தமது திணைக்களத் தலைவரூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

2016/02/25 ம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016ற்கு அமைவாக. **SL** 1 – 2016 என்ற சம்பள வகுப்பின் **ரூபா. 47,615 – 10 x 1,335 – 8 x 1,630 – 17 x 2,170 – ரூபா. 110,895/-** ஆகும். (இச் சம்பள அளவுத்திட்டத்தின் 4வது சம்பள படிநிலையை அடைவதற்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்)

## 04. ஆட்சேர்ப்பு செய்வதற்கான அடிப்படைத் தகைமைகள் :-

### 4.1 வயதெல்லை :-

58 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

### 4.2 தகைமைகள் :

(அ). மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு **(2024.11.25** முன்னரான **மூன்று** (03) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன் உரிய **மூன்று** (03) சம்பள ஏற்றத்தினையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகைத் தரங்கணிப்பிடல் திட்டத்திற்கு அமைவாக, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு **(2024.11.25)** உடன் முன்வரும் **மூன்று** (03) வருட காலத்தினுள் திருப்திகரமான மட்டம் அல்லது அதற்கு மேல் மட்டத்திலான செயற்பாட்டுத் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## 05. பொதுவான தகைமை :-

விண்ணப்பதாரிகள் விளம்பரம் கோரும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

6.1. வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தரம் III பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் திருத்தங்கள் அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள், தாபன விதிக்கோவை, வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை, மாகாணக் கொள்கைகள் மற்றும் விளம்பரத்தின் **பந்தி 10** இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான பரீட்சார்த்த உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

6.2. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையில் 2024.01.31ம் திகதியில் உள்ளவாறாக ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கேற்ப, அனுமதிக்கப்பட்ட கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் புள்ளி ஒழுங்கின் மூலமாக பதவியுயர்த்தப்படுவர்.

6.3. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு **(2024.11.25)** முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு **(2024.11.25)** முன்னர் கேட்கப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் முழுமையற்ற மற்றும் தகைமையற்றவர்களின் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

## 07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்ப பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி, எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருவாராயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தா்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவர் சமா்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம். (மேலே **6.3 பந்தியில்** கூறப்பட்ட விடயங்களை விண்ணப்பதாரிகள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்)

08. விண்ணப்பிக்கும் முறை :-

8.1. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தின் மூலம் பூரணப்படுத்தி தமது திணைக்களத் தலைவருடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

8.2. உரிய விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், சரியான முறையில் பூரணப்படுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.3. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **“கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தரம் III பதவிக்கு சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2024”** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

8.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **2024 நவெம்பர் மாதம்** 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.”** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

09. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிருபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

10. **கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை:-**

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். (**மொத்தம் 100 புள்ளிகள்**)

| **இல** | **புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள்** | **உச்ச புள்ளிகள்** |
|---|---|---|
| **01.** | **சேவைமூப்பு** | |
| 01.1 | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மாவட்ட அலுவலராக உள்ள சேவைக் காலத்திற்கு வருடத்திற்கு $7^1/_2$ புள்ளிகள் வீதம் அதிக பட்சம் 10 வருடங்களுக்கும் மற்றும் அதன் பகுதிக்கும் | 75 புள்ளிகள் |
| **02.** | **செயலாற்றுகை** | |
| 02.1 | பதில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய / வடக்கு மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றிய ஒவ்வொரு வருடத்திற்கும் 01 புள்ளி வீதம், மொத்தம் 05 புள்ளிகள் | 05 புள்ளிகள் |
| 02.2 | கஷ்டப் பிரதேசத்தில் வேலை செய்த காலத்தினுள் பெறப்பட்ட நற்சான்றுகளுக்காக 01 புள்ளி வீதம் கூடிய பட்சம் 05 புள்ளிகள் | 05 புள்ளிகள் |
| 02.3 | ஒழுக்காற்று விசாரணை அதிகாரியாக / மோசடி அல்லது நிதிக்கையாளுகை தொடர்பான விசாரணை அதிகாரியாக கடமையாற்றியிருத்தல் | 05 புள்ளிகள் |
| **03.** | **விசேட தகைமைகள்** | |
| 03.1 | பட்டப்படிப்பிற்கு சமனான துறையில் உயர் கல்வித் தகைமை | 05 புள்ளிகள் |
| 03.2 | தொடர்புடைய துறையில் டிப்ளோமா சான்றிதழ் ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் கூடிய பட்சம் 03 சான்றிதழ்கள் | 03 புள்ளிகள் |

| 03.3 | தாய் மொழியான தமிழ் / சிங்களம் தவிர்ந்த ஏனைய மொழியில் பெற்றுக்கொண்ட திறமை 01 புள்ளி வீதம் [எழுத மற்றும் பேச(Speak)] | 02 புள்ளிகள் |
|---|---|---|
| **மொத்தம்** | | **100 புள்ளிகள்** |

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

12. சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தினை நிரப்புவது சம்பந்தமான முடிவு நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**கவனிக்கவும்:-**

i. இவ்விடயம் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021-2219939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

ii இச்சுற்றறிக்கையை தங்களது அமைச்சின் / திணைக்களத்தின் / அலுவலகத்தின் கீழ் கடமையாற்றும் பொருத்தமான உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டுவருதலை திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2024.11.01
பிரதிகள்

1. பிரதம செயலாளர் வடக்கு மாகாணம் - தகவலுக்காக
2. ஆளுநரின் செயலாளர் வடக்கு மாகாணம் - தகவலுக்காக